1973 நவம்பர் 22]

(*b*) the number out of those that were granted renewal of scholarships in 1972–73; and

(*c*) the reasons, if any, for the denial of renewal of scholarships?

கல்லூரிகளில் பயிலும் வடபலிஜா வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72 ஆம் ஆண்டில் கல்லூரிகளில் பயிலும் வடபலிஜா வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள் எத்தனை பேருக்கு கல்வி உதவித் தொகை அளிக்கப்பட்டது?

(இ) அவர்களில், 1972-73 ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித் தொகைகள் எத்தனை பேருக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டது?

(உ) கல்வி உதவித் தொகையைப் பெறுவதற்காக புதுப்பிக்க அனுப்பப் பட்ட விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டிருந்தால், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) மூன்று.

(இ) ஒன்று.

(உ) மீதி இரண்டு மாணவர்கள் படிப்பை முடித்துவிட்டு உதவித் தொகை புதுப்பிக்கக் கோரவில்லை.

Tamil Nadu Youth Service Corps

* 44 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any representations were received by the Government requesting to provide for promotional opportunities to the Graduates serving in the Tamil Nadu Youth Service Corps; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

[1973 நவம்பர் 22

தமிழ்நாடு இளைஞர் அணி

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு இளைஞர் அணியிலுள்ள பட்டதாரிகளுக்கு முன்னேற்ற வாய்ப்புகள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசு பணிக் கழகம் வழியாக அமர்த்தப்படும் சில குறிப்பிட்ட பணிகளில் பணிஇலக்கத்திற்குட்படப்போகும் இளைஞர் அணியில் உள்ளவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதுபற்றி விரைவில் திட்டவட்டமான முடிவு அறிவிக்கப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவரவர்களே, இளைஞர் அணியில் பணி புரிபவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்க முடியவில்லையென்ற கருத்து இருக்கிறது. ஆகையால் அவர்களை சர்க்கார் அலுவலகங்களில் போடுவதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனை, சமயம் நேரும்போது பரிசீலனை செய்யப்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, தற்போது இளைஞர் அணி அணியில் பணி புரிவோர் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான காரியங்கள், வேலைத் திட்டங்கள் கொடுக்காத காரணத்தால், ஒன்றிய ஆணையாளரால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே அவர்களுக்கு எழுத்தர் போன்ற வேலைகளுக்கான வாய்ப்பு அளிக்கப்படுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நாம் ஏற்று, சந்தர்ப்பம் வரும்போது, அது பரிசீலிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இளைஞர் அணியில் பணி புரிபவர்களுக்கு அரசுத் துறைகளில் எதிர்காலத்தில் ஏற்படும் காலியிடங்களில் பதவிகள் அளிக்கும் முயற்சியை அரசு எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஏற்கெனவே அவ் விதம் தரப்பட வேண்டுமென்பது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில் இருப்ப வர்களுக்கு என்னென்ன வேலைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள் கிராமங்களில் வீட்டிற்குள்ளேயே இருப்பதை அரசு அறியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அந்த அணியின ருக்குக் குறிப்பிட்ட சில பணிகள் ஒதுக்கி வைக்கப்பட்டு, அவர்கள் அவற்றை நிறைவேற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக எந்த இடத்தில் இப்படி இருக்கிறதென்று தெரிவித்தால், அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். கிராமியத் திட்டங்களை நிறைவேற்றுவதும், அரசு செய்யும் காரியங்களை மக்களிடையே தெரிவிப்பதும், முதியோர் கல்வி புகட்டு வதும் அவர்களது காரியங்களாகும்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, இளைஞர் அணியினால் கிராம மக்க ளிடத்தில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நாட்டில் நடைபெறும் நிகழ்ச் சிகளை எடுத்து விளக்கிக் கூறுவதும், அதே நேரத்தில் உடற் பயிற்சிக் கல்வி போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதும் அவர்களுடைய பணியாக இருந்து வருகிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, இந்த அணியில் வேலை செய் பவர்களுக்குக் கடைசி வரையில் வேலை கொடுப்பதாக இருக்கிறதா அல்லது இடையிலேயே வீட்டுக்கு அனுப்புவதாக இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கூடுமான அள வுக்கு அவர்களுக்கு வேலை தரும்படியான முயற்சியில் அரசு ஈடுபட்டு, அது நிறைவேற்றப்பட இருக்கிறது.